

# போர்வாள்


ஆள் 2

திருவள்ளுவர் ஆண்டு 1980 பங்குனி 6
சென்னை, 19—3—49

29


கற்பனைச் சித்திரம்:

## மரணபுரியின் அன்பழைப்பு!

★

"சீ, மூதேவி! எத்தனை தரம் கூப்பிடுவது! காதில் என்ன பஞ்சையா அடைத்துக்கொண்டிருக்கிறாய்? இல்லை வாயில் என்ன கொழுக்கட்டையா அடைத்துக் கொண்டிருக்கிறாய்?"

"ஏன் இப்படிக் காலையில் எழுந்ததும் வள்ளென்று விழுகிறீர்கள்? தினந்தினம் விடிந்ததிலிருந்து முடியும் வரை சச்சரவுதானா?"

"என்ன சொன்னாய்! மரியாதை மட்டு என்பதுகூட மலையேறிவிட்டதுபோலும்! நாவை அடக்கிப் பேசு, அதிகப்பிரசங்கிக் கழுதை! வள்ளென்று விழுகிறேன்? அது மட்டுமல்ல, இன்னும் கொஞ்சம் நேரம்போனால் பளீரென்று கன்னத்தில்கூட விழும் சாக்கிரதை."

"இந்த வீட்டிலே ஒரு கணம் போவதும் ஒரு யுகமாகத்தானிருக்கிறது. எதற்கெடுத்தாலும் சண்டையும் சச்சரவுந்தானா? சாந்தி என்பதே இங்கே நிலைக்காதா? என்னிடம் என்ன குற்றத்தைக் கண்டீர்கள்? ஏன் என்னைக் கண்டால் எரிகிறது உங்களுக்கு?"

"தேவியார் செய்த குற்றங்களையெல்லாம் சொல்ல வேண்டுமோ! ஒன்று, இரண்டா உடனே சொல்ல! கணக்கெடுத்துக் காட்டுகிறேன் பிறகு, கோபித்துக்கொள்ளாதீர்கள்."

"என் உள்ளத்தை ஏன் அம்பு போன்ற வார்த்தைகளால் துளைக்கிறீர்கள்? என்னதான் போக்கிடமற்றவளாக இருந்தாலும் வாயில் வந்தபடி எல்லாம் ஏசலாம் என்பதா?"

"ஹும் என்பதற்குள் நான் என்று விழிக்கடையில் வந்து நிற்கும் நீரைப் பார்! நீலி! போக்கிடமற்றவளே! யார் உன்னைப் போகவேண்டாமென்றது? நான்தான் தினம் உன்னை எங்கேயாவது ஒழிந்துபோ என்று சொல்லிக்கொண்டிருக்கிறேனே! சனியன் ஒழிந்துபோனாலும் வேறு ஒரு கல்யாணம் செய்துகொண்டு குஷியாக இருப்பேன். சரியான கால்கட்டு வந்து சேர்ந்தது நமக்கு! தரித்திரம். ரோஷமற்ற கட்டை. எத்தனை சொன்னாலும் உறைப்பது இல்லை."

திருவாளர் தில்லை நாயகத்தின் இல்லத்தில் தினந்தினம் நடக்கும் திருக்காட்சி இதுதான். தில்லை நாயகம் திலகவதியை ஆசையுடன் விரும்பித்தான் திருமணம் செய்துகொண்டார். திலகவதியின் அழகும் அறிவும் காந்தமெனக் கவர்ந்தன அவரை ஒரு காலத்தில். அழகாக அடுக்கிய கத்தை புத்தகங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பள்ளிக்குச் செல்லும் திலகவதியை கண்கொட்டாமல், கவனத்தை வேறிடத்தில் திருப்பாமல் பார்த்துக்கொண்டேயிருப்பார் தில்லை தம் கடைவாசலிலிருந்து. தான் அவ்வழகிய நங்கையை அவசியம் மணந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் அசைக்க முடியாமல் குடிகொண்டது அவர் உள்ளத்தில். தில்லை நாயகம் பெருத்த வணிகர். கொழுத்த தனவந்தர். திலகவதியின் தந்தை அவருக்குத் தூர உறவு - சுமாரான வருவாயுள்ளவர். எனவே, பணமும் இளமையும் போட்டியிடும் தில்லை நாயகம் பெண் கேட்கச் சென்றபோது, தன் முழுமனதுடன் சம்மதித்தார் திலகவதியின் தந்தை யென்றால் அதில் ஆச்சரியம் எதுவுமில்லை. மணமும் முடிந்தது மகிழ்ச்சி தரும் கோலாகலங்களுக்கும் களியாட்டங்களுக்கும் இடையே!

சின்னாட்களுக்கு முன்னே அழகுத் தெய்வமெனக் காட்சிதந்து அவருடைய மனதை ஆகர்ஷித்த அதே நங்கையிடம் அளவற்ற அருவருப்பும் அசூயையும் தில்லையடைந்ததற்குக் காரணமாயிருந்தவைகள், திடீரென்று திலகவதியின் பிறந்த வீட்டில் நடந்த சில மாறுதல்கள்தான். பணக்கார வீட்டுச் சம்பந்தம் என்பதால் தன் மகளின் மணத்திற்கு மட்டுமீறிச் செலவழித்ததாலும், மற்றும் சில காரணங்களாலும் தன் செல்வத்தை யிழந்தார் திலகவதியின் தந்தை. தான் வசித்திருந்த வீட்டையும் பிறவற்றையும் ஒருங்கே யிழந்து, உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்கும் தங்க விடுதிக்குங்கூட ஏங்கித் தவிக்கும் நிலையை அடைந்த அவர், தன் உறவினர் கண்முன் இந்நிலையில் வாழ்வதைக் காட்டிலும், உயிர் துறத்தல் சிறந்ததென்றெண்ணித் தற்கொலை

புரிந்துகொண்டார் ஒருநாள். பல ஆண்டுகட்கு முன்பே தன் தாயை இழந்திருந்த திலகவதி தன் தந்தையையும் இழந்து ஆதரிப்பார் யாருமற்றவள் ஆனாள்.

பல நாட்கள் சென்றன. தான் கணவன், அவள் தன் மனைவி, தனக்கு அடங்கி ஒடுங்கி பயந்து நடக்க வேண்டியவள் என்ற ஆணவ நினைவு ஆழமாக ஊன்றிவிட்டது தில்லையின் மனதில். அவளுக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை. தன்னை விட்டால் அவள் நடுத்தெருவில் தயங்கி நிற்கவேண்டியவள் தானே என்ற எண்ணம் [illegible] சொன்ன நினைவிற்குப் பக்கபலம் [illegible]ந்தது. பிறகு கேட்கவா வேண்டும் [illegible] ஆர்ப்பாட்டங்களுக்கு! எதற்கெ[illegible]லும் அதட்டலும் அதிகாரமும்தான். எந்த நேரத்திலும் உருட்டலும் மிரட்டலும்தான்! கூப்பிட்ட குரலுக்கு வரவில்லையென்றால் கடுகடுப்பு! காப்பிக்குச் சிறிது சர்க்கரை குறைவென்றால் காதைத் துளைக்கும் கடும் வார்த்தைகள். சோறு சிறிது வேகவில்லையென்றால் சுடுரசம் போன்ற சொற்கள். திலகவதி பொறுமைசாலிதான் என்றாலும் சில சமயங்களில் தன்னைமீறி வரும் ஆத்திரத்தால் எதிர்த்துப் பேசிவிடுவாள் அவரை! தன் மனைவி—தனக்கு அடங்கி நடக்க வேண்டியவள்—தன்னெதிரில் கைகட்டி வாய் புதைத்துப் பயத்துடன் நிற்கவேண்டியவள் தன்னை எதிர்ப்பதா, குறுக்குக் கேள்வி கேட்பதா என்று எண்ணும்போது அவர் உள்ளத்திலே கோபம், கண்களிலே கனல் தோன்ற ஆரம்பித்துவிடும். கதியற்றவள் என்பதால் முதலில் தோன்றிய அலட்சியம் பின் ஆத்திரமாக வளர்ந்தது. போக்கற்றவள் என்பதால் முதலில் தோன்றிய அருவருப்பு பின் நிலைபெற்ற வெறுப்பாக மாறியது. அவளைத் தன் வீட்டிலிருந்து விரட்டி அடித்தால்தான் தான் சுகப்பட முடியும் என்ற எண்ணம் எங்ஙனமோ நிலைபெற்றுவிட்டது அவர் உள்ளத்தில். அதிலிருந்துதான் ஏசிக்காட்டும் வேளைகள், கண்டபடி பேசும் நேரங்கள் அளவிற்கு மீறி அதிகரித்தன அவர் வீட்டில். அம்மாதிரி வேளைகளில் ஒன்றுதான் மேலே குறிப்பிடப்பட்டதும்!

தனியே நின்று தன் நிலையைச் சிந்தித்துப் பார்த்தாள் திலகவதி. இன்று நடந்த சம்பவமும் அவள் கேட்ட வார்த்தைகளும் புதிதல்ல அவளுக்கு! உள்ளத்தைத் துளைக்கும் அவ்வார்த்தைகளைக் கேட்குந்தோறும் வீட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெறும் அவள் மனதில். ஆனால் வெளியேபோய் தன்னந்தனியாகத் தான் என்ன செய்வதென்ற எண்ணம் எழுந்து அவள் மனதைக் குழப்பிவிடும். ஏதோ தான் படித்ததைக் கொண்டு பிழைப்பு தேடிக்கொண்டாலும் சொத்தைச் சமூகம் தன்னைச் சும்மாவிடுமா என்ற பயமும் பிடித்துக் கொள்ளும். வாழாவெட்டி, விபசாரி என்ற வீண்பழிகளைச் சுமத்திவிட[illegible] தன் தலையில் என்று எண்ணி உறுதி[illegible] அவள் உள்ளம் நிலைகுலைந்துவிடும். ஆனால் இன்று அவள் எதை நினைத்தும் கவலைப்படவில்லை. தான் ஒழிந்து போனால் மறுமணம் செய்து கொண்[டு] குஷியாக யிருப்பார் தன் கணவர் என்பதை எண்ணியும், ரோஷமற்ற கட்டை என அவர் பேசினதை நினைத்தும் வீட்டைவிட்டு வெளியேறியே தீர வேண்டும் என்ற உறுதியடைந்துவிட்டாள் அவள்.

மாலை நேரம் கடையிலிருந்து வீடு திரும்பிய தில்லையை வரவேற்றது அவர் மேசைமேல் மடித்து வைக்கப்பட்டிருந்த கடிதத்துண்டு. ''நான் ஒழிந்துபோகிறேன். வேறு மணம் செய்துகொண்டு குஷியாக இருக்கவும்'' என்ற இருவரிகளைப் படித்து முடித்தார் அவர். ''என்ன தைரியம், என்ன நெஞ்சழுத்தம்'' என்று முணு முணுத்தது அவர் வாய்!

* * *

''என்னப்பா இது உனக்கு நன்றாகயிருக்கிறதா? உன்னைத் தெய்வமாகப் பாவித்த மனைவியை வீட்டைவிட்டுவிரட்டிவிட்டாயாமே! வேறு கல்யாணம்கூடச் செய்து கொள்ளப் போகிறாயாமே. இது நியாயமாகப்படுகிறதா உனக்கு?''

''நானென்னப்பா செய்யலாம். ஏதோ ஆத்திரத்தில் பேசினால் வீட்டைவிட்டுப் போய்விட்டாள்! எவ்வளவு தைரியமிருந்தால் அவள் இப்படிச் செய்வாள்?''

''நன்றாகயிருக்கிறதே நீ சொல்வது! நீ அவளைப் படுத்தினபாடு எனக்குத் தெரியாதா? அது பொறுக்காமத்தான் அவள் உன்னை விட்டுப் போய்விட்டாள்! நீபாட்டுக்குக் குஷியாய் இன்னொரு கல்யாணம் செய்துகொள்வாய். பாவம்! அவள் என் செய்வாள்? எங்காவது கெட்டலைந்து கெட்ட பெயருக்கும் உள்ளாகி உயிரிழக்க வேண்டியதுதான்!''

''அவளும் என்னைப்போல் மறுமணம் செய்து கொள்வதை நானா வேண்டாமென்கிறேன்? குஷாலாய்ச்செய்து கொள்ளட்டுமே!''

''வாயால் எல்லாம் பேசிவிடுவாய். ஆனால் அவள் இஷ்டப்பட்டாலும் யார் அவளை இரண்டாந்தாரமாக மணந்து கொள்ள முன்வருவர்! நீ மட்டுமென்ன—அவளைப்போல சிறகொடிந்து தவிக்கும் புறாவையா மணந்து கொள்வாய்? கூட்டைவிட்டு வெளியேறாத சின்னஞ்சிறு கிளியையல்லவா தேடித்திரிகிறாய்! என்னமோப்பா எனக்குப் பட்டதைச் சொன்னேன்! பிறகு உன்னிஷ்டம்.''

தில்லைநாயகத்துக்கும் அவர் நண்பர் நல்லமுத்துவிற்கும் மறுநாள் காலை நடந்த உரையாடல் இது.

* * *

பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒருநாள்! மருங்காபுரி! தயாளகுணம் பொருந்திய தனபால செட்டியார் நடத்திவரும் கலைமகள் ஆரம்பப் பெண்கள் பள்ளியில் ஒரு தனியறை! மாலை நேரம்! செட்டியாரின் அறையிலே அவருக்கும் ஒரு இளம் பெண்ணுக்கும் பேச்சுநடக்கிறது. பேச்சு வாக்குவாதத்திலே வந்து முடிகிறது. பெண்ணைத் தாவிப்பிடிக்க முயல்கிறார் செட்டியார். கதவைத்திறந்து கொண்டு ஓடுகிறாள் அக் காரிகை. பள்ளியின் முன்னுள்ள பெரிய கிணற்றிலே தொபீரென்ற சத்தம். கணநேரத்தில் கணக்கற்ற மக்கள் கூடிவிடுகின்றர் அங்கு!

''என்னப்பா விசேடம்''

''யாரோ ஒரு பொம்பிளை கிணத்துலே விழுந்துவிட்டாள''

''யாரோ என்ன இந்தப் பள்ளிக்கூடத்திலே வாத்தியாராம் அவள். அவள் பேரு திலகவதியாம்''

''யாரு, எந்தத் திலகவதி.''

''தில்லைநாயகத்தின் மனைவியா,, அவளுக்கேம்பா இந்தக்கதி,,

"அந்த விசயமெல்லாம் உங்களுக்குத் தெரியாதா"

"எந்த விசயம்பா"

"அங்கே என்ன பண்ணாளோ என்னமோ, அவள் புருஷன் விரட்டி அடிச்சுட்டான். எங்கெங்கோ அலைஞ்சி இங்கே வாத்தியாரா வந்து சேர்ந்தா. இங்கேயும் என்னமோ தப்பு பண்ணினாளாம். அதுக்காக செட்டியார் தனியாக் கூப்பிட்டு விசாரிச்சாராம். அந்த அவமானம் தாங்காம கிணத்துலே விழுந்துட்டாள்"

கூடியிருந்தமக்கட் கூட்டத்திலே நடந்த உரையாடல் இது! திலகவதி பெண்பள்ளியிலே ஆசிரியையானாள். தற்கொலையும் புரிந்துகொண்டாள். உண்மைதான். ஆனால் அவள் தற்கொலை செய்துகொண்டதற்குக் காரணம் இதோ 'படபட'வென அடித்துக்கொள்ளும் செட்டியாரின் மனச்சாட்சி சொல்லுகிறது: "அந்த அழகிய தங்கக்கிளியைக்கண்டு மயங்கியே நான்தான் அவசியமில்லாதிருந்தும் அவளை ஆசிரியையாக்கினேன். என் கருத்தை வெளியிட சமயம் இன்றுதான் நேர்ந்தது. அவளைத் தனிமையில் என் தனியறையில் கண்டேன்: என் மையலை வெளியிட்டேன்—தையல் நீதி போதித்தாள். கெஞ்சினேன் — மங்கை மருண்டு விடவில்லை. கடைசியில் மானமிழக்க மனமின்றி அவள் கிணற்றில் விழுந்து உயிர்விட்டாள்."

* * *

தில்லைநாயகம் வேலை விஷயமாக வேற்றூர் சென்று வீடு திரும்புகிறார். களைப்புடன் வந்த கணவனுக்குக் காபியைக் கொண்டுவந்து தருகிறாள் புதுமனைவி புனிதவதி.

"கேட்டீங்களா, சேதியை. இன்னிக்கு பக்கத்தூர்லே எவளோ, செட்டியார் பெண்பள்ளிக்கூடத்திலே வாத்தியாராம், அவ கிணத்திலே விழுந்துட்டாளாம்"

"யாரு அது"

"பேரு என்னமோ சொன்னாங்களே, திலகவதியாம்"

"என்ன திலகவதியா."

கையிலிருந்த காபிதம்ளர் கீழே விழுந்தது. அதிலிருந்த காபியெல்லாம் கீழே சிதறி ஓடிற்று. பதறிப்போனாள் இதைப்பார்த்த புனிதவதி. "அவளை உங்களுக்குத் தெரியுமா? யார் அவ! சொல்லுங்களேன். ஏன் அப்படியே முறைக்கிறீங்க" என்று கதறினாள் அவள். ஆனால் அவள் கதறல் அவர் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை! அல்லது ஒருக்கால் காதில் விழுந்தும் அவர் மனதில் விழவில்லையோ அச்சொற்கள்? அல்லது மனதில் விழுந்தும் தன் புதுமனைவியின் புதிர்போன்ற கேள்விக்கு பதில் சொல்லத் தெரியவில்லையோ அப்புண்ணியசீலருக்கு? அவர் பதில் மொழி தாராமைக்குக் காரணம் ஏது என்பது தெரியவில்லை, ஆனால் அவர் பதில் மொழி தரவில்லை என்பதுமட்டும் உண்மை!

* * *

மன்னிக்க முடியாத குற்றம் புரிபவர்கள் தில்லைநாயகங்கள்தான் இன்றைய "இந்து" சமுதாயத்தில்! ஆனால் குற்றத்திற்கான தண்டனையை அனுபவிப்பவர்கள் மட்டும் திலகவதிகளாகவேதான் இருக்கிறார்கள்! கொடுமைக்கு உள்ளாகும் திலகவதிகளாலே தங்கள் வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக ஆக்கிவிடும் தில்லைநாயகங்கள் மீது வழக்குத் தொடுக்க முடியவில்லை, காரணம் அவர்கள் தொடுக்கும் வழக்கைவிசாரிக்கும் அதிகாரம் படைத்த நீதி மன்றம் இந்த சமுதாயத்தில் இதுவரை ஏற்படவில்லை என்பதுமட்டுமல்ல, திலகவதிகள் பக்கம் இருந்து வாதாடுவதற்குத் தேவையான தைரியமும் திறமையும் படைத்த "வக்கீல்"களும் இன்னும் பிறக்கவில்லை! திலகவதிகள் பக்கம் பேசும் துணிவும் தீரமும், அதற்குத் தேவையான அறிவும் ஆற்றலும் அமையப் பெற்றவர்கள் சிலர் இருக்கின்றனர் இன்றைய சமுதாயத்தில்! உண்மைதான்! ஆனால் அவர்களுக்கோ வக்கீல் "சன்னது" கிடைப்பதில்லை! ஏனெனில் வக்கீல் 'சன்னது' வழங்கும் உரிமை படைத்தவர்கள், தில்லைநாயகங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கவேண்டிய நிலையில் இருப்பவர்கள்! இந்த நிலையில் திலகவதிகளுக்கு மரணபுரியின் அன்பழைப்பு, மனதை மகிழ்ச்சிபுரிக்கு இழுத்துச் செல்லும் மனமோகன கீதமாக இருப்பதிலே வியப்பென்ன இருக்கிறது?

———


## சிறந்த சிந்தனைச் சுவடிகள்

**பெரியார்**

| | | |
|---|---|---|
| புதியதோர் உலகு | 0 | 6 |
| சித்திரபுத்திரன் | 0 | 6 |
| திராவிடர் போர் முரசு | 0 | 7 |

**அண்ணா**

| | | |
|---|---|---|
| பொருள் | 0 | 4 |
| பொது சேவையா சொந்தத் தொழிலா | 0 | 2 |
| மறுமலர்ச்சி | 0 | 4 |
| மே தினம் | 0 | 5 |
| 1858—1948 | 1 | 0 |
| தீ பரவட்டும் | 1 | 0 |
| பணத்தோட்டம் | 1 | 0 |
| தமிழரின் மறுமலர்ச்சி | 0 | 8 |

**நெடுஞ்செழியன்**

| | | |
|---|---|---|
| மொழிப்போராட்டம் | 1 | 0 |

**கருணாநிதி**

| | | |
|---|---|---|
| சங்கிலிச்சாமி | 0 | 8 |
| பிள்ளையோ பிள்ளை | 0 | 6 |
| பெரிய இடத்துப் பெண் | 0 | 8 |

**அன்பழகன்**

| | | |
|---|---|---|
| வாழ்க திராவிடம் | 0 | 4 |

**டி. கே. சீனிவாசன்**

| | | |
|---|---|---|
| கடவுளால் ஆகாது | 0 | 8 |

**ஜனார்த்தனம்**

| | | |
|---|---|---|
| கம்பரும் வம்பரும் | 0 | 4 |

**இராதாமணாளன்**

| | | |
|---|---|---|
| இன்பக் கனவு | 0 | 12 |
| பேசும் பிணம் | 0 | 8 |

**இளஞ்செழியன்**

| | | |
|---|---|---|
| தமிழன் தொடுத்த போர் | 1 | 12 |
| ஈரோட்டுப் பாதை | 0 | 6 |
| திராவிடஸ்தான் வேண்டாமா? | 0 | 8 |

**ந. சி. கந்தையா**

| | | |
|---|---|---|
| உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு | 0 | 8 |
| இராமாயணம் நடந்த கதையா | 0 | 3 |
| பெண்கள் புரட்சி | 0 | 14 |
| பெண்கள் போராட்டம் | 0 | 6 |
| ஆரியத்தால் விளைந்த கேடு | 0 | 6 |
| திராவிடம் என்றால் என்ன | 0 | 6 |

கிடைக்குமிடம்:

**பகுத்தறிவுப் பாசறை**

பவழக்காரத் தெரு

சென்னை. 1,

ஒரு சிறு நாடகம்

# பூதேவர் தோல்வி!

"காத்தான்"

**கதை நிகழ் இடம் :—**

மாலூரும், அவ்வூர் சத்திரமும், சந்தைப் பேட்டையும், அங்கிருந்து அரைக்காத வழி தூரத்தில் உள்ள மலைக்கோயிலும்.

## காட்சி 1.

**இடம் :—**மாலூர் சத்திரம்.

**காலம் :—**நண்பகல்.

**நாடக உறுப்பினர்கள் :—**

ஆர்யா
சார்யா
காமா
சோமா
இந்திரா
தந்திரா
உக்கிரா
வக்கிரா
வாமனா

சத்திரத்துத் திண்ணையில் பல "கௌரவப் பிச்சைக்காரர்கள்" அதாவது பூதேவர்கள் அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

காமா: டே சோமா இன்னிக்குக் காலையிலிருந்து இதுவரைக்கும் சுற்றியலைந்தும், ஒரு கழுதைகூட ஒரு காசு கொடுக்கலை, வெறுங் கையா வந்திருக்கேன், உம்பாடு எப்படி?

சோமா: எம்பாடும் இன்னிக்கி அப்படித்தான். இந்த ஊர்ப் பசங்கெல்லாம் சுத்தமாக் கெட்டுப் போய்ட்டானுக. தான தருமம் செய்யணுமிண்ணு நினைக்கிறவனே இல்லை.

சாமா: பணக்காரக் கழுதைகள் நம்பளைக் கண்டா ஓடி ஒளிந்து கொள்றாண்டா! ஹி! ஹி! (சிரிப்பு).

சோமா: ஆமா நம்மைக் கண்டா பயமில்லையா? ஹி! ஹி!! இருந்தாலும் சில முரட்டுப் பேர் வழிகளும் இருக்கிறானுக. நம்மைப் பார்த்தா சீறி விழறானுக. 'சாமியாராவது கிமியாராவது, தீவட்டித் தடியர்களாட்டம் இருந்து கொண்டு பிச்சைக்கு வர வெட்கமில்லை? சோதாப் பசங்கள்" என்று வாய்க்கு வந்தபடி திட்றான், ஒவ்வொருத்தன் அடிக்கக்கூட வர்ரான்.

இந்திரா: இப்படியே இருந்தா நம்பபாடு இனிக் கஷ்டந்தான். நம்ம கூட்ட மென்னவோ, நாளுக்குநாள் பெருகிட்டே போகுது. உழைக்கிற ஜனங்கள் எத்தனை நாளைக்கு நமக்கு அழுவார்கள். சலிப்பு வரத்தானே செய்யும். மேலும் நம்மிடத்தில் அவர்களுக்கிருந்த பயம் இப்போது பூராவும் தெளிந்துவிட்டது!

தந்திரா: நயமும் பயமும் நாலு நாளைக்குத்தானே. **ஆனாலும் மூளையுள்ளவன் எப்படியும் பிழைத்துக் கொள்வான்.** தான் கற்பித்த ஒருவித பயம் தெளிந்து தன் குட்டு வெளிப்பட்டுவிட்டால் உடனே புதிய தந்திரம் புதியபயம் சிருஷ்டிக்கிறான்.

இந்திரா: நீ சொல்வது ரொம்ப சரி—உலகத்தில் பிரசித்திபெற்ற பெரியவர்கள் சரித்திரங்களிலிருந்து இந்த உண்மைதான் விளங்குகிறது. இராமன் என்ன, கிருஷ்ணன் என்ன, ஸீஸர் என்ன, அலக்ஸாந்தர் என்ன, ஜங்கிஸ்கான் என்ன, இவர்கள் எல்லோருடைய வெற்றிக்கும் காரணம் என்ன? புண்ணிய பாவம் எண்ணிப்பாராத மனோபாவம், கூரிய புத்தி, திடசித்தம் இம்மூன்றும் உடையவன், லக்ஷக்கணக்கான மக்களை ஆட்டு மந்தையைப்போல் அடக்கி நடத்துகிறான். ஓயாது உழைப்பவன் ஊழையும் தன் பக்கம் காண்பான் அல்லவா? நாம் என்ன செய்கிறோம்? நயந்துபோக நாணம், பயங்காட்டத் திடமில்லை, பாடுபட சோம்பல்.

உக்கிரா: இந்திரா! நயத்தை விடப் பயத்தில்தான் எனக்கு நம்பிக்கை. பத்துப் பேரிடம் போய் பல்லை யிளித்து "ஐயா தருமவான்களே, பசி காதையடைக்குது, நாலு நாளாகப் பட்டினி. ஏதாவது கொடுங்கள். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமுண்டு" என்று நயமாகக் கேட்டால் ஒருத்தன்கூட உதவ மாட்டான். ஆனால் நடுத்தெருவில் நிமிர்ந்து நின்று தலைக்குமேல் கையை உயர்த்திக்கொண்டு, வழியே போகிறவனைப் பார்த்து "ஏ! பெரிய தம்பி! என்ன வெகு அவசரமாப் போறயே! காரியம் ஆகவா போகிறது! இந்தப் புண்ணிய ஆத்மா கஷ்டப்படறதைப் பார்த்தும் பார்க்காதவன் மாதிரி போறயே! பாவி!! என் வயிறு எரியறது போலத்தான் முடியும் நீ நினைத்திருக்கிற காரியமும்! உன்னுடைய நல்லகாலம், என் கண்ணில் தென்பட்டாய்! இந்த ஆத்மாவைச் சாந்தி செய்திட்டுப்போ எல்லாம் நினைத்தபடி முடியும்' என்றோ, அல்லது ஒரு பிரபுவின் வீட்டின் முன் நின்றுகொண்டு "நெஞ்சமே! இந்த மானிட வாழ்வு நிச்சயமா? இந்த மெத்தை வீடு உனக்குச் சதமா? உன் பெட்டிப் பணமும், கட்டில் மெத்தையும், நாளைக்குக் கட்டையிலே போகும் போது வருமா? இருப்பது பொய்! போவது மெய்!! உடனே தருமம்செய்" என்று எமனுக்குக் கட்டியங் கூறினாலும் பத்தில் எட்டுப்பேர் கண்டிப்பாய் உதவுவார்கள். மனமாரச் செய்யாவிட்டாலும் இவன் வசைமொழிக்கு ஏன் ஆளாக வேண்டுமென்றாவது எல்லாரும் ஏதோ செய்வார்கள்...........சரி அதோ! ஊரிலிருந்து நம்ப செட்டியப்பன் போரான் பாரு, வக்கிரா! நீ போய் அவனைப்பிடி.

வக்கிரா:—அவனா!? எச்சிக் கையிலே காக்காய் ஓட்டாதவனாச்சே! அவனிடத்தில் நம்ம பாச்சா ஒன்றும் பலிக்காது.

உக்கிரா:—சரி அவன் கிடக்கிறான் தள்ளு! அதோ! வடக்கே பார்-இரண்டு ஆசாமிகள் வருகிறார்கள், புது ஆட்களாகத் தெரிகிறது.

வாமனா: முன்னால் வருகிற பேர்வழி நடக்கிற ஜோரைப் பார்த்தால், யாரோ பெரிய ஆசாமி போல் தெரிகிறது. மலைக்கோயிலுக்குப் போகிறவர்களாயிருக்கலாம்; எதற்கும் நான் போய்ப் பார்க்கிறேன்.

(தூரத்தில் **ஆர்யா சார்யா** இருவரும் வருகின்றனர். வாமனா அவர்களெதிரில் போய் வழிமறிக்கிறான். அவர்கள் அவனைச் சட்டைசெய்யாமல் நேராகச் சத்திரத்திற்கு வருகின்றனர். சத்திரத்திற்குச் சமீபத்தில் வந்ததும், சார்யா முன்னால் ஓடிவந்து திண்ணையில் ஒரு பக்கத்தைத் தன் மேல்வேஷ்டியால் சுத்தஞ்செய்து, தன் தோளில் சுருட்டித் தொங்கவிட்டிருந்த மான் தோலை விரிக்கிறான். ஆர்யா, அங்கே கூடியிருந்த பிச்சைக்கார கூட்டத்தை மேலாகப் பார்த்துவிட்டு மான் தோலாசனத்தில் கம்பீரமாக 'சிவா-சிவா' என்று உட்காருகிறான். சார்யா பக்கத்தில் கைகட்டி, வாய்பொத்தி பயபக்தியுடன் நிற்கிறான்)

ஆர்யா: (அங்கிருந்த எல்லோரையும் பார்த்து,) சகோதரர்களே! நானும் உங்களைப் போன்றவனே! ஏன்? உங்களில் ஒருவனே! நம் சமூகம் இது கால பரியந்தம், நம்முடைய மூளைத் திறமையினாலும் கட்டுப்பாடுகளினாலும், மெய் வருத்தமின்றி சுகஜீவனம் செய்து வந்திருக்கிறது. தேனீக்கள் போன்ற உழைப்பாளி மக்கள், சூத்திரர்கள், தேடி வைக்கும் சிறந்த பொருள்களை யெல்லாம், அவர்களை ஏமாற்றி நாமே அனுபவித்து வருகிறோம். ஆனால் சிறிது காலமாக நிலைமை மாறி வருகிறது. உழைக்கும் ஜனங்கள் நம்மைச் சோம்பேறிகள் என்கின்றனர். நம்மவர்களில் சிலர் புத்தியில்லாமல் கட்டுப்பாடுகளை விட்டு நடந்து வருவதாலும், நம்முடைய குலத்துக்கும் நம் வேஷத்திற்கும் மதிப்பு குறைந்து வருகிறது. பல தேசங்களையும் சுற்றிப்பார்த்து நான் கண்ட அனுபவத்தையே சொல்கிறேன். எங்கும் ஜனங்களுக்கிடையில் ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இக் காலத்திற்குத்தக்க பரிகாரம் தேடாவிடில் இனிமேல் நாம் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அல்லது.........லங்கோடை இறுக்கிக்கட்டி மற்றவர்களைப் போல் பாடுபடவேண்டும். உங்களுக்கு எது செய்ய விருப்பம்?

காமா, சோமா முதலிய எல்லோரும் தலையை அசைத்து "ஆம் சுவாமி, தாங்கள் சொல்வதெல்லாம் ரொம்ப வாஸ்தவம். இங்கே ஒரு நாள் தாட்டுவது ஒரு யுகமாகயிருக்கிறது"

ஆர்யா: அப்படியானால் நீங்கள் எல்லோரும் ஏதர்வது தொழில் செய்து பிழைக்கலாமல்லவா?

இந்திரா: நான் பட்டினி கிடந்தாலும் கிடப்பேனே தவிர வேலை செய்ய என்றால் முடியவே முடியாது.

தந்திரா: ஓடியோடி உழைத்துழைத்து, ஓய்ந்து போவதைவிட உட்கார்ந்த இடத்தில் உளுத்துப் போவது நல்லது.

சோமா: தேய்ந்து போவதைவிடத் துருப்பிடித்துப் போவது தான் எனக்கும் பிரியம்.

காமா: இதையெல்லாம் பற்றிச் சிந்திக்கிற சிரமத்தைக் கூட நான் ஏற்றுக்கொள்ள முடியாது! தாங்கள் யாரோ மேதாவிபோல் தெரிகிறது! தங்கள் யோசனைப்படி நான் நடக்கத்தயார்; உழைக்காமல் உண்பதற்கு மட்டும் ஒரு வழியைச் சொல்லிக் கொடுத்து விடுங்கள் போதும். மற்றபடி தேவரீர் சொல்வதற்கெல்லாம் நான் தலை சாய்க்கத் தயார்!

வாமனா: புதிய ஸ்வாமிகள் தான் இதற்கெல்லாம் விமோசனம் சொல்ல வேண்டும்.

(அங்கிருந்த எல்லாரும் **ஆர்யா**வைத் தங்கள் தலைவனாக ஒப்புக்கொள்வதாகவும், அவன் சொற்படி நடப்பதாகவும், சூள் உரைக்கிறார்கள்)

சார்யா: என் குருநாதனை நம்பினவர்களுக்கு யாதொரு குறையும் வராது. அடா! அடா! அந்த ஊரிலே குருநாதர் செய்த திருவிளையாடல்!......ராஜாவே காலைக் கட்டிக் காத்துக் கிடந்தான்.........

ஆர்யா:—சாரி! நீ எப்போதும் என்னுடைய பெருமைகளைப்பற்றியே பேசுகிறாய். ஆனால் நான் பல இடங்களில் பட்ட கஷ்டங்களைப்பற்றி ஏன் சொல்வதில்லை? நம்முடைய ஆர்ய மார்க்கத்தில் அற்புதமான சுகபோகங்களைப் போலவே மகத்தான கஷ்டங்களும் உண்டு. சகோதரர்களே! நீங்கள் இவ் விஷயத்தை மறக்கக் கூடாது. உங்களில் பலர் பலரிடம் பலபல விதங்களில் அடி, அவமானம் முதலிய துன்பங்கள் அடைந்திருக்கலாம்! என்னைப் பொறுத்தவரையில் நான் பட்டிருக்கும் கஷ்டங்களைக் கேளுங்கள்— நான் தடியடி பட்டிருக்கிறேன்; காலுதை பட்டிருக்கிறேன்; என் முகத்தில் காரி யுமிழ்ந்திருக்கிறார்கள். மலத்தை அபிஷேகஞ் செய்திருக்கிறார்கள். சிலர் என் பல்லைப் பிடுங்கியிருக்கிறார்கள். சிலர் உடல் முழுதும் ரத்தம் தோயக் காயப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சமயம், உயிருக்குத் தப்பி ஆற்றில் குதித்து நீந்திக் கரைசேர்ந்திருக்கிறேன். மற்றோர் சமயம், இரண்டு நாள் ஒரு இருட்டறையில் அன்னந் தண்ணீர் இன்றி அடைபட்டிருந்தேன். மற்றுமோர் சமயம், ஒரு சாக்கடைக்குழியில் ஒரு பகல் முழுதும் பதுங்கி யிருந்திருக்கிறேன். இவ்வளவு கஷ்டங்களையும் அவமானங்களையும் அடைவதற்குக் காரணம் என்ன? யோசித்துப் பாருங்கள். பிறர் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளுக்கு ஆசைப்பட்டதால்தான்! கஷ்டப்படாமல் சுகஜீவனம் செய்ய விரும்பியதால்தான்! ஆகையால் சகோதரர்களே, உங்களை மறுபடியும் கேட்கிறேன். எந்தப் பாதையை விரும்புகிறீர்கள்? உழைக்காமல் உண்ணும் நம் ஆர்யப் பாதையில் இவ்வளவு கஷ்டம் இருக்கிறது. எனவே ஆரத்தீர யோசித்துச் சொல்லுங்கள்!

உக்கிரா: என்ன கஷ்டம் வந்தாலும் சூத்திர ஜாதிகளைப்போலத் தொழில்செய்ய என்றால் முடியாது!

வக்கிரா: அனுபவிக்கப் பிறந்தவர்கள் நாம்! அடிமை வாழ்க்கை நடத்தச் சம்மதியோம். கஷ்டத்திற்குப் பயப்படமாட்டோம்.

வாமனா: தேன் விரும்புகிறவன் ஈக்கடியைப் பொறுத்துக்கொள்ள வேண்டாமா?

இந்திரா: வேலிக்கும் முள்ளுக்கும் பயந்து ரோஜாவைப் பறிக்காமல் விடலாமா?

தந்திரா: கடிநாய்கள் காவலிருக்கிறதென்றும், அகழ் ஆழமென்றும், மதில் உயரமென்றும் பயந்தால் கோட்டையைப் பிடித்து ராணியைக் கூடுவதெப்படி?

ஆர்யா: ரொம்பசரி: உங்கள் மனதை யறிந்துகொண்டேன். கஷ்டத்திற்குத் தக்க சுகத்தை யனுபவிப்போம். ஆயினும் அனாவசியமாக உங்களைக் கஷ்டத்திற்கு ஆளாக்க மாட்டேன். நீங்கள் மட்டும் கட்டுப்பாடாகவும், உறுதியாகவும் என் ஆணைக்கடங்கியும் எப்

[11-ம்பக்கம் பார்க்க]

போர்வாள்

19—3—49 சனிக்கிழமை

# இருண்ட வீட்டிற்கு அழைக்கிறார்!

சேறும் சகதியும் நிறைந்த இடம்!

முள்ளும் புதரும் செழித்த பூமி!

நாலாபுறமும் அடர்ந்த காடு!

அந்தக் கானகத்தில் காட்டு மிருகங்களின் பயங்கரமான பவனி!

மூலைக்கு மூலை பன்னெடுங் காலமாக இருக்கும் பாம்புப் புற்றுகள், அவற்றிலிருந்து விஷத்தைப் பொழியும் விரியன் பாம்புகள் திடீர் திடீரென்று தலையைத் தூக்கி நின்றாடும் காட்சி!

மனதை மருட்டும் முள்ளம் பன்றிகள் சிலிர்த்த முட்களை மேலும் சிலிர்த்துக்கொண்டு ஓடி வரும் ஓர் பால்! மிரண்டு ஓடும் அழகிய மான்குட்டிகளைத் துரத்தி ஓடி வரும் புலிக் குட்டிகளின் பயங்கர உறுமல் மற்றோர் பால்! கிட்டி மர வேர்கள் பல கூட, அதன் கீழிருந்து பாம்பு விரைந்தோடும் காட்சி இன்னோர் பால்! சீறிப் பாயும் சிறுத்தைக் கூட்டங்களும், சிந்தையைச் சிதறுண்டு போகச் செய்யும் சிங்க ஏறுகளின் சேர்க்கையும் வேறோர் பால்! பிரம்மாண்டமான காட்டு யானைகள் இடிமுழக்கமெனப் பிளிற, அப் பிளிற்றொலி கேட்டு, சிங்கங்கள் கர்ஜனை புரிய கர்ஜனைக்கு வேங்கைகள் தம் பயங்கரக் குரலாலே பதில் கூற, வேழமும் வேங்கையும் சிங்க ஏறுகளும் மட்டும்தானா உண்டு இக் கானகத்தில், இல்லை! இந்தச் சிறு நரியும் உண்டு'' என்று கூறுவது போல நரிகள் உடனே ஊளையிட, அந்த ஊளைக்கு கரடிகள் தக தக வெனக் குதித்துத் தாளம் போட, காட்டை ஊடுருவிக் கொண்டு பாய்ந்தோடும் மலைவீழ் அருவி தன் சல சலப்பு ஒலியாலே தாளத்திற்கு ஏற்ப மேளம் கொட்டும் காட்சி இன்னோர் பால்!

இத்தகைய சூழ்நிலையில் அமைந்துள்ளது ஓர் இடிந்த வீடு!

இடிந்த வீடா? ஆம்! ஆம்! இருண்ட வீடுகூட!

அதை வீடு என்று அழைப்பது கூட வீடு என்ற சொல்லுக்கு இழுக்கு! இடிந்தும், சரிந்தும் வீழ்ந்து நொறுங்கியும் கிடக்கும் ஓர் பழங்காலப் பாழும் மண்டபம் என்று வேண்டுமானால் கூறலாம்—பொருத்தமாக இருக்கும்.

மண்டபம் முழுவதும் பாழும் இருள் செறிந்துகிடக்கிறது! உள்ளே புலி இருக்கலாம் பதுங்கிக்கொண்டு, பாம்பு இருக்கலாம் நெளிந்துகொண்டு, குரங்குக் கூட்டம் இருக்கலாம் கூத்தாடிக் கொண்டு, காட்டு மிருகங்கள் எதுவும் இருக்கலாம். ஆனால் என்ன இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கான அடையாளம் ஏதுமில்லை. இருள்! இருள்! இருள்! எங்கணும் ஒரே இருள்!

உள்ளே போகிறவர்கள் திரும்பி வரமுடியுமா—நிச்சயமில்லை!

வெளியே இருப்பவர்கள் யாராவது உள்ளே நுழைய விரும்புவார்களா—ஒருபோதுமில்லை!

மரணபுரி, அந்த மண்டபம்! ஆகவே மயானபுரிக்குச் செல்ல விழைவோர்தவிர வேறெவரும் அந்த மண்டபத்திற்குள் நுழைய நினைக்கவும் மாட்டார்கள்!

என்றாலும் அதோ ஒருவர் அந்த இருண்ட வீட்டிற்கு, அல்ல! இடிந்த மண்டபத்திற்கு வாருங்கள் வாருங்கள் என அன்போடு அழைக்கிறார்!

உள்ளிருக்கும் விலங்குகள் இன்னின்ன என்பது அவருக்குத் தெரியுமோ—இல்லை! தெரியாது!

விளக்கு இருக்கிறதோ அவர் கரத்திலே அந்த இருண்ட வீட்டிற்கு வெளிச்சம் தர—அதுவுமில்லை!

சுழல் துப்பாக்கியாவது கையிலே ஏந்தியிருக்கிறாரா உள் நுழைந்து போகும்போது நம்மை எதிர்க்கக்கூடிய விலங்குகளைச் சுட்டு வீழ்த்த—இல்லை!

வீடு இருண்டுள்ளது என்ற போதிலும், உள்ளே அச்சம் தரும் பொருள்களோ விலங்குகளோ ஏதுமில்லை, எனக்குத் தெரியும், ஆதாரம் உண்டு என்றாவது கூறுகிறாரா-இல்லை இல்லை, அவர் இதற்கு முன்னால் அந்தவீட்டிற்குள் நுழைந்ததே இல்லை! இப்போதும் உள்ளே இருப்பது என்ன என்பது அவருக்குத் தெரியாது!

என்றாலும் அழைக்கிறார்! மிக மிக அன்போடு அழைக்கிறார்! வாருங்கள் வாருங்கள் என இரு கைகூப்பி, முகம் மிக மலர்ந்து, சிரம் சற்றே அசைய, மனதை உருக்கும் விதத்திலே, மதுரமான மொழியாலே அழைக்கிறார்!

அழைக்கிறார் என்றால் யாரை? முதியவர்களையா? எதற்கும் துணிந்த வாலிப வீரர்களையா? அஞ்சாத நெஞ்சு படைத்த இளங் காளைகளையா? துணிச்சலுடன் சென்று, ஆபத்துகளைத் தழுவி, புதுமை பல காணவேண்டும் என்ற உள்ளத் துடிப்புடைய குழுவினரையா? அல்ல அல்ல! இளம் பிள்ளைகளை! பச்சைப் பசும் கிள்ளைகளை! பால் மணமும் மாறாத பச்சிளங் குழந்தைகளை!

எட்ட இருந்து பார்த்தாலே கிட்ட நெருங்க அஞ்சி ஓடக்கூடிய இடத்திற்கு, சின்னஞ்சிறு குழந்தைகளை அழைக்கிறார் சொகுசாக! அழைப்பிலே "சொகுசு" இருக்கிறது, "அன்பு" இருக்கிறது, குழைவும் நெளிவும் நிறைய இருக்கிறது; உண்மை! ஆனால் அழைக்கப்படும் இடம் பயங்கரக் காட்டுக்குள்ளே இருக்கும், இடிந்த, இருள் செறிந்த, மண்டப வீடாக அல்லவா இருக்கிறது!

குழந்தைகளை அன்புடன் கூவி அழைக்கிறார்! வாராவிட்டால் வலுக்கட்டாயமாக இழுத்துச்

செல்ல வழி வகைகளைத் தேடுவேன் என்றார்!

அவர் என்ன குழந்தையர் இனத்தின் பகைவரோ, ஈவு இரக்கமின்றி காட்டுப்பாதைக்கு அழைக்கிறாரே வீட்டுக் குழந்தைகளை, குழந்தைகள் என்றாலே அவருக்குப் பிடிக்காதோ என்பீர்கள்! இல்லை! குழந்தையர் குழுவின் பெருநண்பர் அவர்! குழந்தைகள் வாழ்க்கையில் இன்பம் ததும்ப வேண்டும், இன்பம் ததும்பும் வாழ்க்கையில் அவர்கள் நீந்தி மிதக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை!

பிறகு ஏனோ அவர் இதுபோல மரண புரிக்குக் கூவி அழைக்கிறார் அச் சிறு கிள்ளைகளை, பித்தரோ அவர் என்பீர்கள் நீங்கள். பித்தர் அல்லர் அவர், இளங் குழந்தைகளை வாட்டி வதைக்கவேண்டும் என்ற எண்ணம் படைத்த எத்தருமல்லர்! நாடாளும் அமைச்சர்!

அமைச்சரா இத்தகு செயல் புரியத் துணிந்தார், தகுமா இது என்றுதான் கேட்கத் தோன்றும் உங்களுக்கு! ஆனால் அந்த அமைச்சரோ ஆனந்தத்தோடு இந்தப் பணி புரிகிறார், வலுக் கட்டாயமாக, குழந்தைகளை அந்த இடத்திற்கு இழுத்துச் சென்றே தீருவேன் என்று இடிமுழக்கம் புரிகிறார்!

அங்குச் சென்றால் மரணம் சித்திக்குமே அச் சிறு குழந்தைகட்கு, அந்த மலராத மொட்டுகளைக் கருகச் செய்கிறீரே மனம் துணிந்து, நியாயமா இது என்று கேட்டாலோ கேட்பவரை பித்தர் என எள்ளி நகையாடுகிறார் அந்த விசித்திர சித்தர்!

அமைச்சர், ஆகவே அதிகாரம் படைத்தவர், அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்டிப் படைக்கிறேன் இக்குழந்தைகளை என்று கொக்கரிக்கிறார்! அவர்தம் நண்பர்களோ அல்லது கூட்டு அமைச்சர்களோ, "ஆகாது இந்தப் போக்கு, அடங்கி இரும் அன்பரே" என்று தடுத்தனரில்லை, கூடக் குலவிக் கொண்டு அவர்களும் "ததிங்கிணதோம்" போடுகின்றனர் இந்தத் தகாத செயலுக்கு!

தட்டிக் கேட்க ஆளில்லை! எனவே அமைச்சர், "கொட்டு முரசே! நீ கொட்டு முரசே! குழந்தைகளைக் கானகத்து இருண்ட வீட்டிற்கு இழுத்துச் செல்வோம் என்று கொட்டு முரசே நீ, கொட்டு முரசே" என்று முரசு கொட்டுகிறார்!

யார் அந்த அமைச்சர்? எந்த நாட்டவர்? எந்தக் காலத்தவர்? எந்த வரலாற்றுச் சுவடியில் இருக்கிறது இந்த வேதனை மிகு நிகழ்ச்சி என்று எவரும் கேட்பர்! ஆனால் இது வரலாற்று நிகழ்ச்சி அல்ல, இன்றைய நடைமுறை உண்மை! அமைச்சரும் இந்தக் காலத்தவர்தான்!

ஓகோ! அப்படியானால் இது ஏதோ காட்டுமிராண்டிகள் வாழும் மலைநாட்டிலே எங்கோ நிகழ்ந்த நிகழ்ச்சியாதல் வேண்டும் என்கிறீர்களா? இல்லை தோழர்களே இல்லை! நிகழ்ச்சி நிகழும் இடம் இந்நாடுதான்! சென்னை மாகாணம்தான்?

யார் அந்த அமைச்சர், எந்த ஊரிலே நிகழ்த்துகிறார் இக்கொடுமையை என்று கேட்டுவிடாதீர்கள், கொஞ்சம் பொறுங்கள்!

* * *

அமைச்சர் அவினாசியாரின் போக்கே அலாதியானது! அவர் போடும் திட்டங்களோ, தனி ரகம்! அவர் வகுக்கும் வழிமுறைகளோ அவருக்கேயன்றி வேறு எவருக்கும் புரியாத புதிர்கள்! அவருடைய பேச்சோ ஆகாயக் கோட்டை கட்டுவது! அவர் செயலோ, அந்தக் கோட்டைக்கு இருக்கவேண்டிய வாசல் கதவுகள் எந்த உலோகத்தால் செய்யப்பட வேண்டும், அதன் மதிற்சுவர்கள் எத்தனை அடி உயரம் இருக்கவேண்டும என்பன போன்ற ஆராய்ச்சிகளை நிகழ்த்துவது! அவர்தம் மொழியும் செயல் வழியும் மட்டுமல்ல, அவருடைய வாழ்க்கை முறையும் தனியானதோர் "சிறப்பு" உடையதுதான்! அவர் பிரமச்சாரி! திருமணமே ஆகாதவர்! திருக்குறளின் ஒரு பகுதியான காமத்துப்பால்கூட அவருக்குப் பிடிக்காது!

வேட்டுப் போடுவதுபோல, திடீர் திடீரென்று புதுப்புது சட்டங்களையும் திட்டங்களையும் போடுவது அவர் வாடிக்கை! போட்ட பிறகுதான் அவர் உணர்ந்து கொள்வது வழக்கம், தான் போட்ட சட்டமும் திட்டமும் பொருளற்றன, தேவையற்றன, நாட்டுக்குக் கேடு தரக்கூடியன என்பவற்றை! இதை முன் கூட்டியே யாரேனும் எடுத்துச் சொல்லிவிட்டாலோ, சொல்பவர் மீது சீறிப் பாய்வதும், சுடுசொல் வீசுவதும், "விட்டேனா பார்" என்று கூவுவதும், "பிடிசாபம்" என்று முணுமுணுப்பதும் அவருக்கென்றே அமைந்த தனிப் பண்புகள்!

தமிழகம் முழுவதும் முழு மனதோடு எதிர்க்கிறது என்பதை நன்றாகத் தெரிந்திருந்தும் கட்டாய இந்திச் சட்டத்தை இளைஞர் கல்வித் திட்டத்தில் நுழைத்தார். இப்படிச் செய்தால் எதிர்ப்பு, சூறாவளியெனச் சுழன்று எழும் என்று மூதறிவாளர்கள் 'முழுதும் பழுதற்ற முத்தமிழால்' அறிவுரை பகன்றனர்—கேட்க மறுத்தார்; பின்னர் அறப்போர், தமிழகத்தில், ஆளவந்தார்களின் உள்ளத்தை வேதனைக் காடாக்கும் அளவுக்கு மூண்டெழக் கண்டு மிகத் திகைத்தார், இன்றோ, சான்றோர் உரைத்த நன்மொழியைக் கேளாது போனோமே, பாழான இந்தி, நம் மந்திரி சபைக்குத் தீராத தலைவலியாக வந்ததே என்றெண்ணி மனம் துடிக்கிறார்—ஆனால் வெறும் 'வீம்பு' காரணமாக, போட்ட இந்தியை எடுக்க முடியாமல் நெஞ்சு வெதும்பி நிலை தடுமாறி திகைத்துத் துடித்துக் கிடக்கிறார்!

இந்தித் திட்டம் ஒன்றில் மட்டுமே அல்ல, அவர் தொடுக்கும் ஒவ்வொரு திட்டத்திலுமே, அன்பர் அவினாசியார், பின் விளைவுகளை அறியாது முன்னதாக ஆற்றில் இறங்கிவிடுகிறார், பிறகுதான் ஆழம் தெரிந்தபின் காலை எடுக்க முடிவதில்லை—கால் சேற்றிலே சிக்கிவிடுகிறது—பிறகு முன்னமே ஆற்றின் ஆழத்தை எண்ணிப் பாராது போனோமே என்று அவதிப்படுவது வழக்கமாகிவிடுகிறது. ஆய்ந்தோய்ந்து பாராமல், முன்னால் சென்றது—பின்னால் வருவது—இடையே நடப்பது—இவற்றை சீர்தூக்கிப் பாராமல், எதனை எப்போது எதற்காகச் செய்தால் அது எப்படி எவ்வளவு வெற்றியைத் தரும் என்பதை கணக்குப் போட்டுப் பாராமல், "எண்ணித் துணிக கருமம்! துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்னும் திருக்குறட் பொன்மொழியை எள்ளளவும் எண்ணிப் பாராமல் திடுதிப்பென்று தீமை பயக்கும் திட்டங்களை மேற்போட்டுக் கொள்வதும்,

பிறகு அத்திட்டங்களின் தீமைக் கொடுக்கு தன்னைக் கொட்டும் போது கைகளைப் பிசைந்து கொள்வதுமே அவிநாசியாரின் அற்புதமான திறமைகளாக இருக்கின்றன—இதனை எவரும் மறுத்துரைக்கத் துணியார் — எவரும் என்றால் அவிநாசியாரும் கூடத்தான்!

*　　　*　　　*

**ஆதாரக் கல்வி** என்னும் புதியதோர் கல்வித் திட்டத்தை அவிநாசியார் கொண்டுவருகிறார், அதற்காக ஏராளமான பணமும் இந்த ஆண்டின் 'பட்ஜெட்'டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ஆதாரக் கல்வியைப் பரப்ப வாரீர் வாரீர் என்று களிப்புடன் கூவி அழைக்கிறார் அனைவரையும் அமைச்சர் அவிநாசியார், அதன் அருமை பெருமைகளை விளக்குவதாகச் சொல்லிக்கொண்டு நீண்ட நேரம் சட்டமன்றத்தில் சொற்பொழிவும் ஆற்றி இருக்கிறார்! ஆனால், ஆதாரக் கல்வி என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? அதனால் விளையும் நன்மை என்ன? அது தேவைதானா? அதன் தீமைகள் என்னென்ன? கல்வி நிபுணர்கள் அதனை ஒப்புக் கொள்கிறார்களா? நாடு அதனை ஏற்கிறதா? மக்கள் அதனை ஒப்புகிறார்களா? என்னும் இவைபோன்ற தீர்க்கப்பட வேண்டிய ஐயங்களில் ஒன்றையேனும் தீர்த்து வைத்தாரில்லை அச்சொற்பொழிவின் மூலம்!

ஆதாரக் கல்வி ஆதாரக் கல்வி என்று ஆயிரம் முறை பேசிவிட்டார் அமைச்சர், ஆனால் அதன் உண்மை வடிவம் என்ன என்பதை அவர் இதுவரை ஒரு முறை கூட விளக்கியதில்லை—விளக்கவும் முடியாது — அவருக்கே விளங்கவில்லையே அது—பிறகு, பிறருக்கு எப்படி அவர் விளக்கமுடியும்?

சென்னை 'மெயில்' பத்திரிகை—மெயில் என்றால் பழைய மெயில் அல்ல இப்போது இருப்பது! மெயில், ஆரிய வட்டாரத்தின் தத்துப்பிள்ளையாகி நீண்ட நாட்களாகிவிட்டன—இந்த ஆதாரக் கல்வியைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டிருக்கிறது! அமைச்சர் உரையிலேயோ அதற்கான விளக்கம் இல்லை, எனவே கல்வி இலாகாவைக் கேட்டிருக்கிறது விளக்கம் தாரீர் என! விளக்கம் அங்கும் கிடைக்கவில்லை. ஆதாரக் கல்வியைப் புகட்டுவதற்கான ஆசிரியர்களைத் தயாரிக்கும் பயிற்சிக் கூடங்கள் உண்டல்லவா, அவற்றையும் கேட்டுப் பார்த்தது மெயில், அங்கும் விளக்கம்கிடைக்கவில்லை, இவ்வளவு தூரம் விளக்கத்தைத்தேடி அலைந்துவிட்டு, 'மெயில்' ''கல்வி அமைச்சருக்கும் தெரியாமல், கல்வி இலாகாவுக்கும் தெரியாமல், ஆசிரியர் பயிற்சிப் பள்ளியினருக்கும் தெரியாமல், ஒரு கல்வித்திட்டம் வருகிறதே, இந்த துர்ப்பாக்கிய நிலைமையை என்னவென்று கூறுவது?'' என்று வேதனையோடு கேட்டிருக்கிறது! அந்த வேதனை, மெயிலுக்கு மட்டுமல்ல, அமைச்சர் அவிநாசியார் கொண்டு வருகிறார் ஆதாரத்திட்டம் என்பதைக் கேள்விப்பட்ட ஒவ்வொருவருக்குமேதான் ஏற்பட்டிருக்கிறது!

''ஐம்பது ஆரம்பப் பள்ளிகளில் ஏற்கெனவே இந்த ஆதாரக் கல்வி சொல்லித்தரப்படுகிறது, மேலும் 50 பள்ளிகளில் அடுத்த ஆண்டு முதல் இந்தத் திட்டம் அமுலுக்கு வருகிறது. இதற்காக 4 லட்ச ரூபா பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆதாரக்கல்வியை மாணவர்கட்குப் புகட்டுவதற்கான பயிற்சியை ஆசிரியர்கட்குத் தருவதற்காக 17 பயிற்சி நிலையங்கள் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது, இதற்காக வேறு சுமார் 5 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயிற்சிப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கென்று, தனியாக ரூபா 12 லட்சம் தந்திருக்கிறார் நிதி அமைச்சர். இனி எல்லாப் பயிற்சிப்பள்ளிகளிலும் ஆதாரக் கல்விப் பயிற்சியே தரப்படும்'' என்று அவிநாசியார் சட்டசபைச் சொற்பொழிவில் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வளவு ஏராளமான செலவில் நுழைக்கப்படுகிறது ஆதாரக்கல்வி ஆனால் ஆதாரக் கல்வி எப்படி இருக்கும் என்று கேட்டாலோ யாருக்கும் புரியவில்லை! புரியும்படி செய்யவோ அவிநாசியாரால் முடியவில்லை!

அமைச்சர் அவிநாசியாரின் ஆதாரக் கல்வித்திட்டம், ஓர் இருண்ட வீடாகத்தான் இருக்கிறது! வீட்டிற்குள்ளே இருப்பது என்ன என்றாலோ அது அவருக்கே தெரியவில்லை, கொடிய விலங்குகள் உள்ளே இருந்தால் என்ன செய்வது என்று கேட்டாலோ அவரால் பதில் கூற முடியவில்லை, உள்ளே செல்வதற்கு வெளிச்சமாவது காட்டுங்கள் அல்லது வழியாவது கூறுங்கள் என்றால் 'வெளிச்சம் தரும் விளக்கு எதுவும் என்னிடமில்லை, வழியோ எனக்கே தெரியாது!' என்கிறார், பிறகு ஏனையா பச்சைப் பிள்ளைகளை இந்தப்பாழும் மண்டபத்திற்கு அழைக்கிறீர்கள் என்று சொன்னாலோ கோபம் பிறக்கிறது அமைச்சருக்கு! கொதிப்புடன் கூறுகிறார் ஒரு 15 ஆண்டுக் காலத்தில் எல்லா ஆரம்பப்பள்ளி மாணவர்கட்கும் அந்த இருண்ட வீட்டு வாசத்தைக் கட்டாயமாக்கி விடுகிறேன் பாரீர் என்று!

இப்போது ஆதாரக் கல்வி சொல்லித் தரப்படும் இரண்டொரு பள்ளிகளையும் பயிற்சிக் கூடங்களையும் நாம் விசாரித்தறிந்த அளவிலே, அந்தக் கல்வித் திட்டம் ஓர் இருண்ட இடிந்துபோன வீடு மட்டுமல்ல, பயங்கரக் காட்டின் நடுவே இருக்கும் பயனற்ற வீடு என்பது நன்கு புலனாகிறது. மாணவர்கள் தாங்கள் பள்ளிக்கூடத்திற்குத் தரும் சம்பளத் தொகையை, பள்ளிக்கூடப் படிப்பின் மூலமாக தாங்களே, பள்ளி நேரத்திலேயே சம்பாதித்துவிட வேண்டும் என்பதுதான் ஆதாரக் கல்வியின் இலட்சியம் என்று **பொதுவாக நம்பப்படுகிறது!** பொதுவாக நம்பப்படுகிறது என்று ஏன் கூறுகிறோம் என்றால் திட்டமான தகவலைத் தருவோர் யாருமில்லை! திட்டமான தகவலைத் தருவோர் யாருமில்லை என்பதுமட்டுமல்ல, திட்டமான தகவல் தெரிந்தவரும் யாருமில்லை — ஆதாரக் கல்வியை அவசர அவசரமாக நுழைக்கும் நம் அருமை அமைச்சர் அவிநாசியாருக்கே அது தெரியாது, கல்வி இலாகாவுக்கும் தெரியாது! இது விசித்திரமான நிலை மட்டுமல்ல, வேதனை நிரம்பிய நிலையுங்கூட! இளைஞர்களின் கல்வி ஒரு நாட்டின் உயிர் நாடி போன்றது. வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் சிற்பியே இக் காலத்துக் கல்வி முறை! ஆகவே கல்வி முறையை ஏதேனும் திருத்துவது என்றால் அது மிக மிக ஜாக்கிரதையாகவும், பொறுப்புணர்ச்சியுடனும் சிறந்த

நிபுணர்களின் ஒப்புதலுடனும் துணையுடனும் செய்யப்படவேண்டும். இருதயத்திலே செய்யும் ஆபரேஷனைப் போன்றது இளைஞர்களின் கல்வியிலே செய்யப்படும் சீர்திருத்தம். எனவே இத்தகு திருத்தங்கள் மிகுந்த கவலையுடனும், தக்க ஏற்பாடுகளுடனும், சரியான கருவிகள் மூலமாகவும் சரியான நிபுணர்களாலேயும்தான் செய்யப்பட வேண்டும். புது திருத்தங்களைச் செய்வதற்கு முன்னால், இக் காலத் திட்டத்தைவிட புதிய திட்டம் கூடுதலாக நன்மை பயக்கும் என்பது, தெளிவாக, திட்டமாக, ஐயப்பாட்டிற்கு இடமின்றி ஏற்பட்டால் மட்டும்தான் புது திருத்தங்கள் செய்யலாமே தவிர இல்லையானால், இருக்கும் திட்டத்தை மாற்றுவது வீண் வம்பை விலைக்கு வாங்கும் வீணர் செயலாகத்தான் முடியும்! எனவேதான் அவிநாசியார் தனக்கும் விளங்காமல், பிறர்க்கும் விளக்காமல், கல்வித்துறை நிபுணர்களின் ஒத்துழைப்பையும் பெறாமல், நீண்ட சிந்தனையோ நல்ல ஆராய்ச்சியோ கூட இல்லாமல் ஆதாரக் கல்வி என்ற பெயரால் **விளக்கமற்ற குழப்பம்** ஒன்றை இன்றைய கல்வித் திட்டத்தில் நுழைத்து, இப்போது இருந்துவரும் கல்வி முறையைச் சீர்குலைப்பது கண்டு நாம் மிக மிக வருந்துகிறோம்; நாம் என்ன, நாடே வருந்துகிறது! ஆனால் அது பற்றி அவிநாசியாருக்கு என்ன கவலை? அவர், அமைச்சர்! அதிகாரம் அவர் கரத்திலே இருக்கிறது! ஆகவே அவர் ஏன் நாட்டைப்பற்றியோ, நாட்டு மக்களின் உள்ளம் வேதனைப்படுவது பற்றியோ நினைத்துப் பார்க்கப் போகிறார்!

ஆரம்பப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் சிறு குழந்தைகள்! பச்சைப் பிள்ளைகள்! அப்பொழுதுதான் மலர்ந்த முல்லைகள்! ஏழும் எட்டும்தான் அந்த இளங் கிள்ளைகளின் வயது! அந்த வயதிலே அந்தக் குழந்தைகள் பள்ளிச் சம்பளத்தை பள்ளிப் பாடத்தின் மூலமே சம்பாதித்துத் தீரவேண்டும், அதற்கேற்ற முறையிலே கல்வித் திட்டம் வகுக்கப்படவேண்டும், அதற்காக, தறி நெய்வது, தக்ளியில் நூல் நூற்பது, மரம் வெட்டுவது, தச்சு வேலை செய்வது போன்ற கடின வேலைகளை அந்த இளங் கிள்ளைகளின் தோள் மீது சுமத்தவேண்டும் என்பதுதான் அவிநாசியாரின் கல்வித் திட்டத்தின் அடிப்படை என்று தெரிகிறது. இது உண்மையானால், தென்னாட்டு இளங் குழந்தைகளுக்கு, ஒரு சர்க்கார் செய்யக்கூடிய கொடுமை இதைவிட வேறு இருக்க முடியாது! நிச்சயமாக இருக்க முடியாது!

14-வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் எந்தத் தொழிற்சாலையிலும் அல்லது அலுவலகத்திலும் வேலை செய்யக்கூடாது, அது கொடுமை என்று கருதி, இதே சர்க்கார்தான், தொழிற்சாலை சட்டம் ஒன்றின்மூலம் அத்தகைய நிலைமையைத் தடுத்திருக்கிறார். இது வரவேற்கக்கூடியது! பாராட்டப்பட வேண்டியது! வாழ்க்கையின் 'ருசி' இன்னதென்று தெரிந்துகொள்வதற்கு வேண்டிய வயதுகூட நிரம்பாத 'முல்லை' மொக்கு'களை தொழிற்சாலை என்ற செக்கில் இட்டு ஆட்டி பணம் என்ற எண்ணெயை உற்பத்தி செய்வது கொடுமை, அது கூடாது என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். அந்தக் கொடுமையை சட்டத்தின் மூலமாகத் தடுக்க முன்வந்த சர்க்காரின் நற்பண்பை மனித உள்ளம் படைத்த எவரும் பாராட்டாமல் இருக்கவும் மாட்டார்கள்! சென்னை சர்க்காரின் தொழில் அமைச்சர் தோழர் சீத்தாராம் ரெட்டியார் இதுபோன்ற சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்—எனவே நம் பாராட்டையும் பெற்றிருக்கிறார்—ஆனால் ஏறத்தாழ அதே நேரமாகப் பார்த்து, கல்வி அமைச்சர் அவினாசிலிங்கனார் எந்தக் கடினவேலைகளை இளங் குழந்தைகள் புரிவது தகாது—கூடாது என்று தொழில் அமைச்சர் தடை போட்டாரோ, அதே வேலைகளை, அதே வயதுடைய பிள்ளைகளுக்கு, ஆதாரக் கல்வி என்ற பெயராலே **கட்டாய பாடமாகத்** திணிக்கிறார்! தொழில் அமைச்சர் நிறைவேற்றியுள்ள சட்டத்தை கல்வி அமைச்சரின் சட்டம் நேரடியாக மீறுகிறது! ஒன்றுக்கொன்று நேர் முரணான இந்த இரண்டு சட்டங்களும் சட்டசபையிலே நிறைவேறத்தான் செய்கிறது! சட்டம் ஓர் இருட்டறை என்கிறாரே அறிஞர் அண்ணா அவர் தீட்டியுள்ள 'வேலைக்காரி' படத்திலே, அது எவ்வளவு உண்மை! அது இருட்டறை மட்டுமல்ல, முரண்தொடையாகவும் அல்லவா இருக்கிறது!

தொழில் அமைச்சர் செய்த நன்மையை கல்வி அமைச்சர் அழித்துவிடுகிறார்! வலது கரம் தந்த அன்பளிப்பை இடது கரம் பறிக்கும் பழங்கதை இது!

கல்விக் கூடத்தில் இருக்க வேண்டிய இளம் பிள்ளைகள் தொழிற்சாலையில் தொழில் புரிவது நாட்டுக்கு அவமானம்; எனவே இக்கேட்டினை இனியும் நான் விட்டு வைக்க மாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறினார் தொழில் அமைச்சர். "ஆஹா மெத்தச் சரி அன்றோ! அவர்களை பள்ளிக்கு அனுப்பும்" என்று சொல்லிக்கொண்டே கல்வி அமைச்சர், பள்ளிக்கூடத்தையே தொழிலகமாக மாற்றி, எந்தத் தொழிலை அவர்கள் விட்டுவந்தார்களோ, அதனையே, இங்கும்புரிக என்று கட்டளையிடுகிறார். ஒரே ஒரு வித்தியாசம்! தொழிற்சாலையிலே இளம் பிள்ளைகள் செய்துவந்த தொழிலுக்கு **தொழில்** என்றே பெயர்! கல்விசாலையிலே அதே தொழிலுக்குக் **கல்வி** என்று பெயர்! **"லேபில்"தான் வேறு வேறு! சரக்கு அதுவேதான்!**

* * *

"ஆதாரக் கல்வி நுழைக்கப்பட்டுள்ள சில பள்ளிகளிலே, பள்ளிக்கூடம் நடைபெறும் 5 மணி நேரத்தில் 3 மணி நேரம், மாணவர்கள் நூல்நூற்கக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்" என்று **தோழியர், [illegible] அமிருத்தீன் எம். எல். ஏ.** சட்டசபையில் திடுக்கிடத்தக்க தகவல் ஒன்றைத் தந்துள்ளார்கள். இதனை, அம்மையாருக்குப் பிறகு பேசிய கல்வி அமைச்சர் மறுக்கவுமில்லை, இது ஆதாரமற்ற வதந்தி என்பதாக ஏதும் உரைக்கவுமில்லை, எனவே இத்தகவல் உண்மை என்றே ஏற்படுகிறது! இது தான் ஆதாரக் கல்வி என்றால், இந்த ஆதாரக் கல்வியைத்தான், தென்னாட்டின் வருங்கால சந்ததியினர் அதாவது இக் கால இளங் குழந்தைகள் பயின்று தீர வேண்டுமென்றால், இந்த ஆதாரக் கல்வியைப் பயிலுவதற்குத்தான்

இலட்ச இலட்சமாக பணம் புது பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால், சாதி மத கட்சி வேற்றுமையின்றி தென்னாட்டில் வாழ்பவர் அனைவரும் இந்த ஆதாரக் கல்வியை, இன்றே, இப்போதே, குழிதோண்டிப் புதைக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை சிறிதளவேனும் சிந்திக்கத் திறமை படைத்த நேர்மையாளர்கள் எவரும் நிச்சயம் மறுக்க முடியாது. உண்மையாகவே இந்த திட்டம் அமுலுக்கு வந்து, உண்மையிலேயே எல்லா மாணவர்களும் இந்தத் திட்டத்தின்படியே தான் "கல்வி" பயிலவேண்டும் என்று ஏற்பட்டு, உண்மையாகவே இக் கல்வியைப் பயின்ற குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி வருங்கால சமுதாயமாக உருவாவார்களானால், அந்த சமுதாயம் கடைந்தெடுத்த காட்டுமிராண்டி சமுதாயமாகவே இருக்கும் என்பதில் இரண்டுபட்ட அபிப்பிராயமே இருக்க முடியாது, உண்மையில் இதுபோன்ற நிலை ஏற்பட நாம் இரண்டு அங்குல அளவுக்கு இடம் கொடுத்துவிட்டாலும் சரி, பிறகு, நம் இந்தியா ஆசிய நாடுகளின் ஜோதியாகத் திகழ வேண்டும், உலக மன்றத்தில் உயரிடம் பெற்றுப் பொலியவேண்டும், பெரிய வல்லரசுகளில் ஒன்றாகத் திகழவேண்டும், பலம் பொருந்திய உன்னத நாடாக வளர்ச்சிபெற வேண்டும் என்றெல்லாம் பேசுகிறோமே, அது அவ்வளவும் வெறுங் கனவாகவே முடிந்துவிடும்—நாம் வெறும் "ஜிப்சி"களின் கும்பலாகத்தான் மாறிவிடுவோம். ஆய்ந்தோய்ந்து பாராத அவிநாசியார்களின் ஆபத்து மிகுந்த ஆதாரத் திட்டத்தாலே இந்தக் கேடு நம் சமுதாயத்திற்கு நேர இருக்கிறது—நாட்டு நலனில் அக்கரை உடையோர் அனைவரும் உடனே முன்வந்து நம்மை நோக்கி ஓடிவரும் இந்த ஆபத்து வெள்ளத்திற்கு அணைகோலுவது அவசியம். தினம் தினம் 5 மணி நேரத்தில் 3 மணி நேரம் நூல் நூற்பதிலே மாணவர்கள் செலவிடத் தொடங்கினால் செலவிடும்படி சர்க்காரால் கட்டாயப்படுத்தப்பட்டால், ஒரு இருபதாண்டுக் காலத்திலே, இந் நாடு, நாடாக இருக்காது: ஒரு மாபெரும் தக்ளி சமாஜமாக மாறிவிடும்! அதாவது காட்டுமிராண்டிகளின் குகையாகி விடும்! ஆம்! இது உறுதி! 5-ல் 3-மணி நேரம் நூல் நூற்பதிலே செலவிடப்பட்டால், மிச்சமிருக்கும் 2-மணி நேரத்திலே இளங் குழந்தை, உலக அறிவை எங்ஙனம் பெற முடியும்? தாய் மொழிப் பயிற்சி, ஆங்கிலக் கல்வி, வரலாறு, நிலவிளக்கம், விஞ்ஞானம், கணக்கு இவ்வளவுக்கும் 2-மணி நேரம் எங்ஙனம் போதும்? போதாது! எனவே ஆதாரக் கல்வி, நாட்டின் ஆதாரத்தைக் கல்லி எறிவது திண்ணம்! அதாவது அறிவு வளர்ச்சி தடைப்படுவது உறுதி! அறிவு வளரவில்லையேல் நாடு வளர்வது எங்கே! சமுதாயம் செழிப்பதுதான் ஏது?

* * *

செவ்வாய் மண்டலத்திற்குப் போகலாமா, சந்திரனை நேரிற் சென்று காண்பது சாத்தியமா, செயற்கை மழையைத் தேவையானபோது தேவையான அளவுக்குப் பொழியவைத்துக் கொள்ளலாமா, இருதயம் கெட்டுப்போனால் புது இருதயமே அமைத்துவிடலாமா, ஆண்பெண் சேர்க்கையின்றி மனிதர்களையே படைப்பது சாத்தியமா என்பதுபோன்ற அற்புதமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் மேல் நாட்டினர். ஆனால் இங்கோ அவிநாசியார் தக்ளிபாடத்திற்கு 5-ல் 3-மணி நேரம் ஒதுக்குகிறார், அதற்காக ஆதாரக் கல்வி என்றோர் திட்டமும் தருகிறார், அந்த இளம்பிள்ளைகட்கெல்லாம் கட்டாய பாடமாகவும் ஆக்குகிறார்! என்ன விபரீதம்! அமைச்சர் அவர்கள் தம் ஆதாரக் கல்வித் திட்டத்தை கொஞ்சம் ரகசியமாகவே வைத்துக்கொண்டிருக்கட்டும்—வெளி நாட்டாருக்குத் தெரிந்தால் கைகொட்டிச் சிரிப்பார்கள். வானூர்தியில் ஏறிக்கொண்டு மனிதன் விண்ணிலே பறக்கும் இந்த 1949ல் காட்டுமிராண்டி காலத் தக்ளியையும் கவைக்குதவாத கைராட்டையையும் கட்டாயமாகப் பயிலும்படி ஆணையிடுகிறார்கள் சென்னை சர்க்கார் என்றால், உலகம், நம்மைக் கேலி செய்யும்! திட்டம் ரகசியமாகத்தான் இருக்கவேண்டும்!

* * *

1. மத்திய சர்க்கார் நம் மாகாணத்து ஆரம்பக் கல்விக்காக வென்று ஏராளமான தொகையை ('கிராண்ட்') நன்கொடையாக அளிக்கிறார்கள்.

2. ஆரம்ப ஆசிரியர்களை ஆரம்ப ஆசிரியத் தொழிலில் பயிற்றுவதற்காக ஆண்டுதோறும் 50 லட்சரூபா தருகிறார்கள்.

3. கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தை நாம் மேற்கொள்ளும் போது, அதற்காக ஏற்படுஞ் செலவில் 100-க்கு 30 பக்கு தொகையை மத்திய சர்க்கார் தரத் தயாராய் இருக்கிறார்கள்,

ஆனால் இந்த மூன்று வகையான நன்கொடையையும் நாம் ஆதாரக் கல்வித்திட்டத்தை மேற்கொண்டால்தான் தரமுடியும் என்று மத்திய சர்க்கார் அழுத்தந்திருத்தமாக அறிவித்து விட்டார்கள்.

ஆகவே நாம் ஆதாரக் கல்வித் திட்டத்தைப் புறக்கணிப்பதற்கு இல்லை."

கல்வி அமைச்சரின் சட்டசபைச் சொற்பொழிவிலே இருக்கும் செத்தைகளையும் குப்பைகளையும் அகற்றிவிட்டால், மிச்சமாக இருக்கும் சத்துள்ள பகுதி இதுதான்!

மத்திய சர்க்கார் குட்டுகிறார்கள்! ஆகவே குனிந்து கொடுக்கிறார்கள் சென்னை சர்க்கார்! அர்த்தமற்ற ஆனால் ஆபத்துமிக்க ஆதாரக்கல்வியின் முழு இரகசியம் இதுதான்!

ஆதாரக் கல்வியை ஏற்றுக் கொள்ளாவிட்டால் மத்திய சர்க்காரின் நன்கொடை கிடைக்காதாம், எனவே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமாம்! வெட்கமின்றிக் கூறுகிறார் பிரமச்சாரி வீரர் இதனை! அதுவும் சட்டசபையில்! என்ன வெட்கக்கேடு!

"நன்கொடை" தருகிறார்களாம் நன்கொடை, வடநாட்டு சர்க்கார்! நன்கொடையா தருகிறார்கள் அவர்கள்! அல்ல அல்ல! நம்மிடமிருந்து வருமான வரி மூலமாகவும் சுங்க வரி மூலமாகவும் புகையிலை வரி மூலமாகவும் அமித லாப வரி மூலமாகவும் மற்றுமுள்ள இவை போன்ற ஏராள வருவாய் தரும் வரிகள் மூலமாகவெல்லாம் நம் பணத்தைத் தட்டிப் பறிக்கிறார்களே டில்லி சர்க்கார், அந்த நம் பணத்திலே, ஒரு சிறு பகுதியை நமக்குத் திருப்பித் தருகிறார்கள்! அவ்வளவுதான்! இதற்குப் பெயர்தான் நன்கொடையாம்! அந்த "நன்

கொடை"க்காக வேண்டித்தான் நாம் நம் இளைஞர்களின் கல்வித் திட்டத்தை கவைக்குதவாக கருத்தற்றதாக ஆக்கிவிட வேண்டுமாம்! இந்த அழகிலேதான் இந்த சர்க்காரிலே மந்திரிகளாக இருப்பவர் ஓயாமல் கூறிக்கொண்டிருக்கிறார்கள் "திராவிடஸ்தான் பிரிவினையா செச்சே! அதெல்லாம் தேசத்துரோகிகளின் கூச்சல்!" என்று ஓமந்தூரார் சென்ற வாரம் நடைபெற்ற சென்னை முத்தியாலுப்பேட்டை பள்ளி நூற்றாண்டு விழாக் கூட்டத்தில்கூட, தென்னாடு தனியாக இருக்கவேண்டும் என்று கேட்பது தேவையுமில்லை, அது சாத்தியமுமல்ல என்று கூறியிருக்கிறார்! ஆனால் நடைமுறையிலேயோ, இதுபோல, கல்வித் திட்டத்தில்கூட, டில்லி சர்க்காரின் கட்டளையை நிறைவேற்றும் ஏவலாளன் நிலை சென்னை சர்க்காருக்கு. ஆரிய வட்டாரத்தின் செல்வப் பிள்ளையான "மெயில்" ஏடு கொஞ்சம் துணிச்சலாகவே எழுதியிருப்பதைப்போல, **"தனியளவாவது சுயமரியாதை உணர்ச்சியுடைய எந்த மாகாணமும் இத்தகைய நிலைமையை எதிர்த்துப் புரட்சி செய்யாமல் இராது."** ஆனால் சென்னை சர்க்காரோ புரட்சி செய்யவில்லை என்பது மட்டுமல்ல, புரட்சி செய்பவர்களையும் சமய சந்தர்ப்பம் கூட பாராமல், எந்த இடத்திலும் தூற்றவும் தாக்கவும் தவறுவதில்லை!

* * *

"நம் கல்வி அமைச்சர், நியாயமாகப் பார்த்தால், ஏதோ ஒரு ஆஸ்ரமத்தில் இருந்துகொண்டு, தம்முடைய விசித்திரமான தத்துவங்களைப் பரிசோதித்துக்கொண்டு, பொதுமக்களுக்குத் தம்மால் இவ்வளவுதூரம் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டிருக்க வேண்டியவர். ஆனால், எப்படியோ, துரதிஷ்டவசமாக, இந்த மாகாணத்தின் தலைவிதி அவரை கல்வி அமைச்சராக ஆக்கிவிட்டது. எனவே, இந்த மாகாணத்தின் கல்வி அமைப்பு வேகவேகமாக முழுக் குழப்பம் என்கிற நிலைமைக்கு இழுத்து வரப்படுகிறது."

—"மெயில்", 14-3-49 தலையங்கத்தில் இதுபோல மனம் நொந்து எழுதியிருக்கிறது. மாகாணத்தின் தலைவிதியே இதற்கெல்லாம் காரணம் என்றும் கூறுகிறது.

"மெயில்" ஆசிரியர் மதப்பற்று மிக்க ஓர் கிறிஸ்தவ அறிஞர் ஆகவே அவர் அப்படிக் கருதுகிறார், நமக்கோ தலைவிதி தத்துவத்தில் நம்பிக்கை இல்லை, எனவே அவினாசியாரின் ஆதாரக் கல்வித் திட்டம் என்ற ஆபத்தான போக்கைப்பற்றி என்ன சொல்வதென்றே நமக்குப் புரியவில்லை!

* * *

ஆபத்துகள் ஆயிரமாயிரம் நிறைந்த காட்டுப் பாதையிலே இருக்கும் இருண்ட வீடு, இன்றைய ஆதாரத் திட்டம்! முட்புதர்கள் மொய்த்ததரைஎங்கும்—எதிர், முட்டு கருங்கற்களும் நெருங்கும்! இட்டு அடி எடுத்தெடுத்து வைக்கையிலே, கால்கள் தடுங்கும், உள், நடுங்கும்—அத்தகைய பயங்கர பூமியிலே அமைந்துள்ளது அந்த இருண்ட வீடு! அந்த வீட்டிற்குத் தான் இளங் குழந்தைகளை வருக வருக என அழைக்கிறார் அன்பர் அவினாசியார்! அன்போடுதான் அழைக்கிறார், அவரும் நல்லவர் தான். அழைப்பதும் நல்ல எண்ணத்தோடுதான்—இந்த மூன்று உண்மைகளிலும் நமக்குத் துளியும் ஐயமில்லை—ஆனால் அழைக்கப்படும் இடம் இருக்கிறதே அந்த இருண்ட வீடு, பாழும் மண்டபம், காட்டு விலங்குகள் உறையக் கூடிய இடம், அதை எண்ணும் போதுதான் நம் நெஞ்சு நடுங்குகிறது!

திராவிடமே! உன் ஆசைக் குழந்தைகளை இருண்ட வீட்டிற்கு அழைக்கிறார் அவினாசியார்—அழைப்பு, "சர்க்காரின் கட்டாயம்" என்ற துப்பாக்கி முனையின் துணையுடன் இருக்கிறது—அங்குச் சென்றாலோ குழந்தைகள் உயிரோடு (அதாவது நல்லறிவாளராகத்) திரும்புவது கடினம்—என்றாலும் அழைக்கிறார் — அந்த "அன்பழைப்பு"க்கு உன் பதில் என்ன?

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும் நடந்துகொள்ள வேண்டும்.

(எல்லாரும் மறுபடியும் உறுதி கொடுக்கிறார்கள்)

ஆர்யா: சரி, நாம் இன்றிரவே இவ்வூரைவிட்டுப் புறப்படவேண்டும். மூன்று நாட்களுக்கு, நம் எல்லோருக்கும் போதுமான உணவுப் பொருள்களை நீங்கள் உடனே தேடிக்கொண்டு வரவேண்டும், நல்ல வர்ணமுள்ள பட்டுத்துணியும் கொஞ்சம் வேண்டும்.

காமா: இன்று ஒருவேளை சாப்பாட்டிற்கே வழியில்லை. பிறகு மூன்று நாளைக்கு வேண்டிய ஆகாரம் எப்படித் தேடுவது?

சோமா: இந்த வர்த்தகரிடம் கொன்றாலும் கொடுக்க மாட்டான்.

ஆரியர்: ஒருவரையும் கொல்ல வேண்டியதில்லை. கேட்டால் ஒருவனும் கொடுக்கமாட்டான். இருக்கும் இடம் அறிந்து, கைச் சாதுரியமும், கால் விரைவும் உள்ளவன் ஒருவன் போய், காணாமல் எடுத்து வரவேண்டியதுதான்.

தந்திரா: அந்த வித்தையில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

வாமனா: பட்டுத்துணி விஷயம் நான் பார்த்துக்கொண்டு வருகிறேன்.

ஆரியா: இரவு பத்து நாழிகைக்குப் புறப்படத் தயாராயிருங்கள்.

(எல்லாரும் கலைகின்றனர்.)

---

## காட்சி 2.

**இடம்.** மாலூரை யடுத்த மலை மீதுள்ள லோகநாதன் கோவில் முன் மண்டபம்;

**காலம்:** நள்ளிரவு.

(ஆர்யா உத்திரவிடவும் மற்றவர்கள் உத்திரவுப்படி நடந்து கொள்கின்றனர்.)

ஆர்யா: "இந்தக் கோவிலின் ஒன்பது சிலைகள் இருப்பதை எண்ணிப்பார்த்தோம். இப்போது இவ்வொன்பது சிலைகளையும் பெயர்த்துவிட வேண்டும். முதலில் லோகநாதசாமி சிலையைப் பீடத்திலிருந்து பெயர்த்து எடுங்கள்.

(சார்யா, இந்திரா, தந்திரா முதலானவர்கள் அப்படியே பெயர்த்துச் சாய்க்கின்றனர்.)

"சரி லோகநாதன் சந்நதியில் உள்ள துவாரபாலகர், தேவநாதன், நாகநாதன் சிலைகளையும் பெயருங்கள்.

(தொடரும்)

# நாடும் ஏடும்

## வைத்தீஸ்வரருக்கல்ல! வயிற்றீஸ்வரருக்கு !

ஒரு காலத்தில் தஞ்சாவூர் மகாராஜா தஞ்சை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு 365 வேலி நிலம் இனாமாக எழுதிவைத்து விட்டாராம். அந்த நிலம் அவ்வளவும் இன்னமும், கோயில் சொத்தாகத்தான் இருந்துவருகிறதாம்! மகாராஜா ஏன் 365 வேலி நிலம் என்று கணக்காக இனாம் அளித்தாராம் தெரியுமா வருஷத்திற்கு 365 நாட்கள் இருக்கின்றன அல்லவா, ஒரு நாளைக்கு ஒரு வேலி, வீதம் 365 நாளைக்கு 365 வேலியாம்! ஒவ்வொரு நாளும் ஒரு வேலி நிலத்திலிருந்து கிடைக்கும் நெல்லை அரிசியாக்கி, பொங்கலாக்கி ஆண்டவனுக்குப் படைக்கவேண்டும் என்பது அவருடைய ஏற்பாடாம். இதைக் கேட்டவுடனே, "அடேஅப்பா! வைத்தீஸ்வரன் பாடு யோகம் தான்! ஒரு நாளைக்கு ஒரு வேலி நிலத்து அரிசி என்றால் சாமானியமா? நமக்கு எட்டு அவுன்ஸ் அரிசி—அதிலும் பாதி கல், மண்! அவருக்கோ ஒரு வேலி நிலத்து அரிசி! அவருக்கென்ன குறை? வயிறார சாப்பிட்டு நிம்மதியாக இருப்பார்! நம்மைப் போலவா!" என்று பொறாமைப் படுகிறீர்களா? செ! செ! என்ன இருந்தாலும் இவ்வளவு அவசரம் கூடாது உங்களுக்கு! மகாராஜா 365 வேலி நிலத்தை வைத்தீஸ்வரர் நைவேத்ய கைங்கர்யத்திற்காக எழுதிவைத்தார் என்று சொன்னோமே தவிர வைத்தீஸ்வரர் அந்நிலத்து அரிசியைச் சாப்பிடுகிறார் என்று சொன்னோம்! அதுதான் இல்லை! பட்டாதான் வைத்தீஸ்வரர் பேருக்கு! அரிசி போவது வயிற்று ஈஸ்வரர் கூட்டத்திற்கு! அதாவது நடுவே இருக்கும் சில பண்டார சந்நிதானத்திற்கு! விஷயம் இப்படியிருக்க வைத்தீஸ்வரரைப் பார்த்து வீணாகப் பொறாமைப்படுகிறீர்களே, இது நியாயமா? "ஓஹோ அப்படியா சங்கதி! இது எப்படி ஐயா தெரிந்தது உமக்கு" என்கிறீர்களா? தோழர் ராமநாதன் செட்டியார் எம். எல். சி. சென்னை முத்தண்ணாக்கள் சபையில் (அதாவது மேல்சபையில்!) சொல்லியிருக்கிறார் இவ்வளவு தகவலையும்! இன்னமும் உண்மையில் உண்பது வைத்தீஸ்வரரா அல்லது வயிற்று ஈஸ்வரர்களா என்பதுபற்றி உங்கட்கு ஐயமிருந்தால், நேரே ரயிலேறி வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் போங்கள். வைத்தீஸ்வரரையே கேளுங்கள் உண்பது யாரென்று! "கூறு சங்கு தோல் முரசு கொட்டோசை கண்டது அல்லால் சோறு கண்ட மூளி இங்கு யார் சொல்!" என்று அவர் சட்டென்று பாட்டு மொழியாலே பதில்சொல்கிறாரா இல்லையா பாருங்கள்!


ஜுபிடர்

வேலைக்காரி

கதை, வசனம்:

சி. என். அண்ணாதுரை

★

ஏழ்மையில் உழலும் ஓர் எழிலரசியின் காதற் சித்திரம்! செல்வம், சீரழிவு; உருக்கம், உத்வேகம்; காதல், களிப்பு; வேதனை, வெற்றி;

ஆகிய

உள்ள உணர்ச்சிகள் பின்னிக்கிடக்கும்

பெருங்கதை

★

19-3-49 முதல்

பாரகன் & லக்ஷ்மி

சென்னை (பெரம்பூர்)


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)